**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**O.S. No.681/2023**
**Deposition of Witness for the Plaintiff – PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **சுப்பிரமணியன்** | **Caste:** | |
| **Father/ Husband Name** | **தெண்டாயுதபாணி** | **தொழில்** | விவசாயம் |
| **Village:** | **பெரியகடைவீதி** | **Religion:** | |
| **Taluk:** | **அரவக்குறிச்சி** | **Age :** | 64 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 27.03.2026 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் தரப்பு சாட்சியத்தில் நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து, புரிந்து கொண்டு கையொப்பம் செய்தேன். நிரூபண பிரமான வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை என் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| **வ.எண்.** | **தேதி** | **ஆவணத்தின் தன்மை** | **சான்றாவணம்** |
|---|---|---|---|
| 1. | 15.06.2021 | பிரதிவாதி, வாதிக்கு எழுதிக்கொடுத்த ரூ.5,00,000/– க்கான கடனுறுதிச்சீட்டு அசல் | வா.த.சா.ஆ.1 |

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

**(பிரதிவாதி வழக்கறிஞர் ஆஜர் இல்லை. கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைக்காக தாவா ஒத்திவைக்கப்பட்டது.)**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.